செ.வெ.எண்: 07 நாள்: 08.01.2018

மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலா்,
செங்கல்பட்டு
ந.க. எண் 2369/மா.தி.ந/2017
நாள் 03..1.2018

## பத்திரிக்கை செய்தி

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, காஞ்சிபுரம் மாவட்டம் சார்பாக மாற்றுத் திறனாளிகள் நலனுக்கான அரசு நலத் திட்டங்கள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, அறிவொளி தீபம் கலைக்குழுவினரால், 8.01.2018 மற்றும் 9.01.2018 ஆகிய இரண்டு நாட்கள் மாற்றுத் திறனாளிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சி கீழ்கண்டுள்ளவாறு நடத்தவுள்ளார்கள். விழிப்புணர்வு நிகழ்ச்சியின்போது, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம், செங்கல்பட்டு அலுவலகத்தில் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்தும், பல்வேறு அரசு துறைகள் மூலமாக மாற்றுத் திறனாளிகளுக்கு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்தும், மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு பள்ளிகள் குறித்தும் விழிப்புணர்வு பிரசாரம் செய்து பிரசார கையேடுகள் வழங்கப்படவுள்ளது. 8.01.2018 அன்று காலை10.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவாட்ட ஆட்சியர் அவர்களால் மேற்படி நிகழ்ச்சி துவக்கி வைக்கப்படவுள்ளது.

| வ.எண் | நாள் மற்றும் நேரம் | நிகழ்ச்சி நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1. | 8.01.2018 காலை 10.00 மணி | மாவட்ட அட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் |
| 2. | 8.01.2018 நன்பகல் 12.00 மணி | அறிஞர் அண்ணா பேருந்து நிலையம், காஞ்சிபுரம் |
| 3. | 8.01.2018 பிறப்பகல் 3.00 மணி | பேருந்து நிலையம், வாலாஜாபாத் |
| 4. | 8.01.2018 பிற்பகல் 5.00 மணி | பேருந்து நிலையம், காட்டாங்குளத்தூர் |
| 5. | 9.01.2018 காலை 10.00 மணி | பேருந்து நிலையம், தாம்பரம் |
| 6. | 9.01.2018 நன்பகல் 12.00 மணி | பேருந்து நிலையம், செங்கல்பட்டு |
| 7. | 9.01.2018 பிற்பகல் 3.00 மணி | பேருந்து நிலையம், மதுராந்தகம் |
| 8. | 9.01.2018 பிற்பகல் 5.00 மணி | பேருந்து நிலையம், செய்யூர். |

எனவே, பொது மக்கள் திரளாக கலந்து கொண்டு பயன்பெறுமாறு திரு. பா. பொன்னையா, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

மாவட்ட ஆட்சியர்
காஞ்சிபுரம்

3.1.2018